# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2011 - 2012

# வளர் தமிழ் 6

சுட்டெண்:....................................................... நேரம்: 150 மணித்துளிகள்

**1) வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. பின்வருவனவற்றுள் உயிர்மெய் எழுத்து
   அ) ட் ஆ) அ இ) க ஈ) ன்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. உள்ளத்திலிருந்து வெளிப்படும் பண்பட்ட இயல்பு
   அ) ஆசை ஆ) பண்பாடு இ) சினம் ஈ) மகிழ்ச்சி

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. உயிரைக்காட்டிலும் மானமே பெரிதென உயிர் நீத்த மன்னன்
   அ) கரிகாலன் ஆ) குமணன் இ) பாரி ஈ) இரும்பொறை

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. திணை என்பதைக் குறிக்கும் வேறு ஒரு சொல்
   அ) வகை ஆ) சிகை இ) பகை ஈ) பாகை

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. ஆராய்ச்சிமணியைப் படுக்கை அறையில் அமைத்திருந்த மன்னன்
   அ) பாரி ஆ) எல்லாளன் இ) குமணன் ஈ) சேரன்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. அகம், புறம் என்று இலக்கியம் வகுத்தவர்
   அ) ஆரியர் ஆ) தமிழர் இ) சமணர் ஈ) வடவர்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. சொல்லியத்தில் கருத்துத் தொடங்கும் இடம்

அ) செயப்படுபொருள் ஆ) அடைமொழி இ) பயனிலை ஈ) எழுவாய்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. என்னுயிர்ச் செல்வம் என்று பாவேந்தர் குறிப்பிடுவது

அ) பணம் ஆ) வீடு இ) குழந்தை ஈ) கல்வி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. குளத்தில் பூக்கள் மலர்ந்துள்ளன. இதில் எழுவாய்

அ) குளம் ஆ) மலர்ந்திருக்கின்றன இ) பூக்கள் ஈ) எழுவாய்இல்லை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. அதிக பயன்களைத் தரும் வீட்டு விலங்கு

அ) பூனை ஆ) ஆ (பசு) இ) நாய் ஈ) ஆடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. யார்? எது? எவை? என்ற வினாக்களை பயனிலையோடு சேர்த்து வினாவினால் வருவது

அ) எழுவாய் ஆ) பயனிலை இ) செயப்படுபொருள் ஈ) அடைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. கொக்கும் ஆமையும் வாழ்ந்த இடம்

அ) கடல் ஆ) நதி இ) ஏரி ஈ) குளம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. மதி, திங்கள் என்பதைக் குறிக்கும் வேறு ஒரு சொல்

அ) உலகம் ஆ) நிலா இ) பரிதி ஈ) கதிரவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. வறுமை காரணமாகக் குமணனை நாடிச் சென்ற புலவர்

அ) மோசிகீரனார் ஆ) சக்திமுற்றப் புலவர் இ) பெருந்தலைச் சாத்தனார் ஈ) ஔவையார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. உயர்திணைக்குரிய பால்வகை

அ) 2 ஆ) 3 இ) 5 ஈ) 4

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. மயிலாடுமலை முன்பு ———————— ஆக இருந்தது.

அ) நகரம் ஆ) பேரூர் இ) பட்டினம் ஈ) சிற்றூர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. நீலம், மஞ்சள், வட்டம், சினம் என்பன

அ) சினைப்பபெயர் ஆ) தொழிற்பெயர் இ) குணப்பெயர் ஈ) காலப்பெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. நாட்டார் பாடல்கள்

அ) கற்றோருக்குரியவை ஆ) கடினமானவை

இ) எளிமையானவை ஈ) பொருள் விளங்க முடியாதவை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. ஏர் என்பது

அ) சிற்றுந்து ஆ) எருது இ) கலப்பை ஈ) அரிவாள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. யாழினி பாட்டுப் பாடினாள். இங்கே வந்துள்ள வினைச் சொல்லுக்குரிய செயல்

அ) ஓடுதல் ஆ) பாடுதல் இ)வரைதல் ஈ) நடத்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. முதல்முதல் இலங்கைக்கு வந்த ஐரோப்பியர்

அ) போர்த்துக்கேயர் ஆ) ஆங்கிலேயர் இ) ஒல்லாந்தர் ஈ) இத்தாலியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. சென்றான் என்பதன் எதிர்கால வடிவம்

ஆ) செல்கிறான் ஆ) செல்வான் இ) செல்லுகின்றான் ஈ) செல்லவில்லை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. நூல், எழுதுகோல், மரம், ஆடு என்பன

அ) உயர்திணை ஆ) அஃறிணை இ) பலர்பால் ஈ) ஆண்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. மாமன்னன் எல்லாளனின் நினைவாலயம் அமைந்துள்ள இடம்

அ) அநுராதபுரம் ஆ) வன்னி இ) யாழ்ப்பாணம் ஈ) மட்டக்களப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. காற்றுள்ள போதே தூற்றிக் ______________

அ) கோல் ஆ) கொழ் இ) கொள் ஈ) கொள்ளாதே

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. இல்லம், உறையுள், மனை என்ற சொற்கள் குறித்து நிற்கும் ஒரு பொருள்

அ) காடு  ஆ) நாடு  இ) பள்ளி  ஈ) வீடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. கடைசிவரை ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய வன்னித் தமிழ் மன்னன்

அ) சங்கிலியன்  ஆ) பண்டாரவன்னியன்  இ) கயிலைவன்னியன்  ஈ) இராவணன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. திருக்குறள்;

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவர்க்கு
____________________ மற்றுப் பிற

அ) பொருளல்ல  ஆ) செயலல்ல  இ) அணியல்ல  ஈ) அனியல்ல

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. அவை + ஐ சேர்த்தால் வருவது

அ) அவையை  ஆ) அவற்றை  இ) அவைகளை  ஈ) அவையளை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. ஆழி என்றால்

அ) கடல்  ஆ) ஆறு  இ) கிணறு  ஈ) குளம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) கீழே தரப்பட்டுள்ள இலக்கண மொழியியல் வினாக்களுக்கு விடை தருக.

1. பால் எத்தனை வகைப்படும்? ஒவ்வொன்றுக்கும் எடுத்துக்காட்டுத் தருக.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

2. படி - இச்சொல் பெயராகவும் வினையாகவும் அமையுமாறு சொல்லியங்கள் தருக.

பெயர்:_______________________________________________

வினை:_______________________________________________

3. இடம் எத்தனை வகைப்படும்? படர்க்கைக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

_______________________________________________

_______________________________________________

4. சினைப்பெயர், தொழிற்பெயர், குணப்பெயர் ஒவ்வொன்றுக்கும் இவ்விரண்டு எடுத்துக் காட்டுகள் தருக.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

5. பின்வரும் சொல்லியங்களுக்குப் பொருத்தமான செயப்படுபொருளை வைத்து எழுதுக.

1 தங்கை ____________________ உண்டாள்.

2. நிலா ____________________ படித்தாள்.

3. பூனை ____________________ பிடித்தது.

(புள்ளிகள் 15)

**3) கீழ்வரும் பாடலைப் படித்து, கொடுக்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு முழுவிடை தருக.**

பொழுது புலர்ந்தது கீழ்த்திசையில்
புதுமை மலர்ந்தது வான்வெளியில்
பாயும் ஒளியில் பாய்ந்தொரு குருவி
பாட்டுப் பாடுது கேள் கேள்!

பொன்வெயில் துள்ளுது பொழிலினிலே
புதுமலர் விரியுது பொய்கையிலே
புன்னைப் பூவின் தேனை பருகிய வண்டு
போதை பேசுது கேள் கேள்!

பொழுது சாய்ந்தது புல்வெளியில்
புதுமை பாய்ந்தது கீழ்த்திசையில்
ஆலம் விழுதுகள் ஆடும் இருளில்
ஆந்தை அலறுது கேள் கேள்!

1. எந்தப் பூவின் தேனை வண்டு பருகியது?

______________________________

______________________________

2. எத்திசையில் பொழுது புலர்ந்தது?

______________________________

______________________________

3. புது மலர்கள் எங்கே விரிகின்றன?

______________________________

______________________________

4. பாட்டுப் பாடுவது எது?

______________________________

______________________________

5. பின்வரும் சொற்களுக்குப் பொருள் தருக.

ஒளி : ____________________

மலர் : ____________________

(புள்ளிகள் 10)

## 4) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. அறம் இது, மறம் இது என்று அறியக் கற்க வேண்டிய நூல் எது?

2. தனித்தனியே இருந்து வந்த ஆட்சிப்பகுதிகளை ஆங்கிலேயர் ஒன்றிணைத்த ஆண்டு எது?

3. எல்லாளன் கட்டிய பெலிவாவி இன்று எப்படி அழைக்கப்படுகின்றது?

4. மூடஆமை என்ற பாடத்திலிருந்து நீர் அறிந்து கொண்ட இரண்டு பண்புகள் எவை?

5. வீட்டுத் தோட்டத்தால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக.

(புள்ளிகள் 15)

## 5) கீழே காணும் பகுதியைப் படித்து, தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.

நாள் முழுவதும் அலைந்து திரிந்து நடப்பதற்கே இயலாத நிலையில் மரத்தின் கீழ் சேயோன் உறங்கிவிட்டான். அப்போது தன் காலடியில் ஏதோ ஊர்வதை உணர்ந்து அப்பால் பாய்ந்தான். தனக்கு அருகில் மிகவும் நீளமான நாகபாம்பு ஒன்று படம் எடுத்து ஆடிக்கொண்டு, தன்னைத் தீண்ட முயற்சிப்பதைக் கண்டான். கொஞ்சம் ஆடி அசைந்தாலும் பாம்பு அவனைத் தீண்டிவிடும். எனவே, அசையாது நின்றான். அவ்வேளையில், அவனுக்கு அண்மையில் சுவர்மணிக்கூட்டு ஒலி போல் டிக் டிக் என்ற ஒலியொன்று கேட்டது. அவ்விடத்தை நோக்கினான். அங்கே சிறிய கீரியொன்று நாக்கை நீட்டியபடி வந்து கொண்டிருந்தது. நாகபாம்பின் கவனம் இப்போது தனக்குப் பகையான கீரிமேல் திரும்பியது. கீரி எப்பயமும் இன்றி பாம்பை நோக்கி முன்னேறியது. ஆனால் பாம்பு கீரி மேல் பாய்ந்தது. இப்போது சேயோன் அவ்விடத்தை விட்டு அகன்று தூரத்தில் நின்று இச் சண்டையைப் பார்த்தான். கீரி புத்தியுடன் சண்டையிட்டுப் பாம்பைக் கொன்றது. உருவத்தைப் பார்த்து ஒருவரின் திறமையை மதிப்பிடக் கூடாது என்று சேயோன் அறிந்து கொண்டான்.

1. ஏன் சேயோன் அசையாது நின்றான்?

_______________________________________________

2. பாம்புக்குப் பகையான உயிரி (பிராணி) எது?

_______________________________________________

_______________________________________________

3. சேயோன் எங்கே உறங்கினான்?

_______________________________________________

_______________________________________________

4. சண்டையில் வென்ற உயிரி எது?

_______________________________________________

_______________________________________________

5. இக் கதையிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது என்ன?

_______________________________________________

_______________________________________________

(புள்ளிகள் 10)

**6) கீழுள்ள பந்தியை வாசித்து, அதனை உமது வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

எனது பெயர் செழியன். நான் தமிழ்ப் பள்ளியில் வளர்தமிழ் ஆறு (6) படிக்கின்றேன். இம்முறை எங்கள் பள்ளியில் திருக்குறள் போட்டி நடைபெற்றது. நானும் பங்குபற்றினேன். எனக்கு முதலாம் இடம் கிடைத்தது. நான் மகிழ்ச்சி அடைந்தேன். ஆசிரியர்களும் பெற்றோர்களும் நண்பர்களும் என்னைப் பாராட்டினர்.

(புள்ளிகள் 05)

**8) கீழ்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து, 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக.**

1. மூடஆமை என்ற பாடற் பகுதியை உமது உரைநடையில் கதையாக எழுதுக.

2. உம்மால் மறக்க முடியாத ஒரு நிகழ்வு.

3. மாமன்னன் எல்லாளன்.

(புள்ளிகள் 15)